# வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் வீடு திரும்புதல்

## பெருவெள்ளத்திற்குப் பின்னர் எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பது பற்றிய தகவல்

**Tamil | தமிழ்**

**OFFICIAL**

பெருவெள்ளத்திற்குப் பின்னர் உங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது, உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் காயம் அல்லது நோயிலிருந்து பாதுகாப்பாக வைத்திருக்க இந்தத் தகவலைப் படியுங்கள்.

### பாதுகாப்பாக வீடு திரும்புவது எப்படி

- வெள்ள நீர் ஆழம் குறைந்ததாக இருந்தாலும்கூட, அதில் ஒருபோதும் நடக்கவோ, நீந்தவோ, அல்லது வாகனம் ஓட்டவோ கூடாது. மீண்டும் அந்த இடத்திற்குத் திரும்புவது பாதுகாப்பானதாக ஆகும்வரை, குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை அங்கிருந்து தொலைவில் வைத்திருக்கவும்.
- தோலில் வெள்ள நீர் மற்றும் சேறு படுவது நோய் மற்றும் தொற்றுகளை ஏற்படுத்தும். வெள்ள நீரைத் தொடுவதைத் தவிர்க்கவும், அத்துடன் உங்கள் கைகளை அடிக்கடி சவர்க்காரம் போட்டுக் கழுவவும்.
- சுத்தம் செய்யும்போது, தண்ணீர் உட்புக முடியாத வகையில் காலை மூடும் காலணிகள் (பூட்ஸ்) மற்றும் இரப்பர் அல்லது விலங்குத்தோலால் செய்யப்பட்ட கையுறைகள் ஆகியவற்றை அணியவும்.
- வெள்ள நீர் படக்கூடிய ஏதேனும் வெட்டுக்காயங்கள் அல்லது புண்களை மூடவும். உங்களுக்குக் காயம் உண்டானால் அல்லது வெட்டுக்காயம் ஏற்பட்டால், காயத்தை சுத்தம் செய்தபின், உடனடியாக உங்கள் மருத்துவரைத் தொடர்புகொள்ளவும்.
- வீட்டிற்குள் நுழையும் முன் பின்வரும் விடயங்களைக் கவனியுங்கள்:
    - ✓ வெள்ள ஓட்டம் உங்கள் வீட்டிற்குள் கழிவுநீர் செல்ல வழிவகுக்கும்.
    - ✓ எரிவாயு அல்லது மின்சார விநியோகம் சேதமடைந்திருக்கலாம்.
    - ✓ உங்கள் வீட்டின் கட்டமைப்பு சேதமடைந்திருக்கலாம்.
    - ✓ உங்கள் வீடு, கொட்டகை அல்லது தோட்டத்தில் பாம்புகள் மற்றும் பிற விலங்குகள் தங்கியிருக்கலாம்.
    - ✓ நுளம்புகள் (கொசுக்கள்) பெருகும் என்பதால், உங்கள் முற்றத்திலுள்ள கொள்கலன்களில் தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றுங்கள்.
    - ✓ உங்கள் வீட்டில் பூஞ்சனம் இருந்தால், நீங்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கு முன், அதைச் சுத்தம்செய்ய வேண்டும்.
- நீங்கள் மின்சாரத்தை இழந்தால், குளிர்சாதனப் பெட்டியிலுள்ள உணவு அல்லது மருந்துகளைச் சரிபார்க்கவும். நீங்கள் அவற்றை எறிய வேண்டியிருக்கலாம்.
- நகர்த்தக்கூடிய ஜெனரேட்டரை வீட்டிற்குள் பயன்படுத்த வேண்டாம், ஏனெனில் இது கார்பன் மோனாக்சைடு விசவாயுவை உற்பத்தி செய்து, உங்களை மிகவும் நோய்வாய்ப்படுத்தக்கூடும்.
- வெள்ளமானது உங்கள் குடிநீரை மாசுபடுத்தக்கூடும். உங்கள் குழாய் நீர் குடிப்பதற்குப் பாதுகாப்பானதா என்பதை உங்கள் தண்ணீர் வழங்கும் நிறுவனத்துடன் சரிபார்க்கவும். நீங்கள் பிரதான நீர் விநியோகத்தில் தொடர்புபடாமல் இருந்து, உங்கள் தனியார் நீர் விநியோகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக நினைத்தால், உங்கள் உள்ளூர் கவுன்சிலைத் தொடர்பு கொள்ளவும்.

- நீர்நிலைகள், கடற்கரைகள் அல்லது நீச்சல் குளங்கள் ஆகியவை மாசுபட்டிருக்கக்கூடும் என்பதால் அவற்றில் நீந்த வேண்டாம்.
- வெள்ளமானது உங்கள் வீட்டின் குழாய்கள், சீமெந்துத் துண்டுகள் அல்லது ஓடுகள் போன்ற பகுதிகளை சற்று இடம் மாற்றக்கூடும். நீங்கள் கல்நார் (அஸ்பெஸ்டோஸ் -asbestos)-ஐக் கண்டால், அதைத் தொட்டு சீர்குலைக்காமல், உங்கள் உள்ளூர் கவுன்சிலைத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் கழிவுநீர் அமைப்பானது பாதிக்கப்பட்டிருந்தால், உங்கள் தண்ணீர்ப் பாவனையைக் குறைத்து, குழாய் திருத்துபவர் (plumber) ஒருவரைத் தொடர்பு கொள்ளவும்.

## உங்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்

- இந்த நேரத்தில் நிறைய உணர்ச்சிகளை அனுபவிப்பதென்பது இயல்பானது. உங்களை நீங்களே கவனித்துக்கொள்ள சிறிது நேரம் ஒதுக்குங்கள், அத்துடன் ஆதரவிற்கு உங்கள் அன்புக்குரியவர்களை அணுகுங்கள்.
- நீங்கள் மிகவும் உணர்ச்சியில் ஆழ்த்தப்பட்டுள்ளதாக உணர்ந்தால், இலவச ஆதரவுக்காக1300 375 330 என்ற எண்ணில் 'மனநலம் மற்றும் நல்வாழ்வு மையங்களை' (Mental Health and Wellbeing Hubs) அழைக்கலாம்.
- உங்கள் உடல்நலம் குறித்து உங்களுக்குக் கவலை இருந்தால், உங்கள் பொது மருத்துவரை (ஜி.பி.) பார்க்கவும். அவசரகாலத்தில் 000-ஐ அழைக்கவும். உங்களால் தொலைபேசியூடாக அழைக்க முடியாவிட்டால், உங்களுக்கு அருகாமையிலுள்ள மருத்துவமனைக்கு நீங்கள் செல்லவேண்டும்.
- நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் நெருக்கடி நிலைமையில் இருந்தால், 'லைஃப்லைன்' (Lifeline)-ஐ 13 11 14 என்ற எண்ணிலோ, அல்லது 'பியோண்ட் ப்ளூ' (Beyond Blue)-ஐ 1300 224 636 என்ற எண்ணிலோ அழைக்கவும்.

## நிதி ஆதரவைப் பெறுங்கள்

- உங்கள் வீடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், ஒருமுறை வழங்கப்படும் அவசரகால உதவித்தொகைக்கு நீங்கள் தகுதி பெறக்கூடும். மேலும் தகவலுக்கு https://emergencypayments.dffh.vic.gov.au -ஐப் பார்வையிடவும்.
- உங்கள் வீடு சேதமடைந்துள்ளதால், அல்லது 7 நாட்களுக்கு மேல் உங்களால் உங்கள் வீட்டை அணுக முடியாவிட்டால், அதை மீண்டும் நிறுவுவதற்கான உதவி (Re-establishment Assistance) கிடைக்கக்கூடும். மேலும் தகவலுக்கு, https://services.dffh.vic.gov.au/personal-hardship-assistance-program -ஐப் பார்வையிடவும்.
- ஒரு பேரழிவின் காரணமாக வருமானத்தை இழக்கும் ஊழியர்களுக்கும், தனிநபராக வணிகம் செய்பவர்களுக்கும் 'பேரிடர் மீட்புக் கொடுப்பனவு' (Disaster Recovery Allowance) கிடைக்கிறது. பேரழிவு நடந்த பின்னரான 13 வாரங்கள் வரைக்கும் நீங்கள் இந்தக் கொடுப்பனவுகளைப் பெறலாம். மேலும் தகவலுக்கு https://www.servicesaustralia.gov.au/natural-disaster-events?context=60042 -ஐப் பார்வையிடவும்.
- உங்களுக்குக் கடுமையான காயம் ஏற்பட்டிருந்தாலோ அல்லது வெள்ளத்தால் உங்கள் வீடு கடுமையாகச் சேதமடைந்திருந்தாலோ, ஆஸ்திரேலிய அரசின் பேரிடர் மீட்புக் கட்டணத்திற்கு (Australian Government Disaster Recovery Payment) நீங்கள் தகுதி பெறக்கூடும். பெரியவர்கள் $1,000 என்ற தொகையையும், குழந்தைகள் $400 என்ற தொகையையும் பெறலாம். மேலும் தகவலுக்கு https://www.servicesaustralia.gov.au/victorian-floods-october-2022-australian-government-disaster-recovery-payment -ஐப் பார்வையிடவும்.
- தற்காலிக தங்குமிடம் மற்றும் பிற உதவிகளுக்கு, 1800 560 760 என்ற எண்ணில் 'வெள்ள மீட்பு அவசர இணைப்பை' (Flood Recovery Hotline) அழைக்கவும்.
- காப்பீடு சம்பந்தப்பட்ட விடயங்களில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், 1800 734 621 என்ற எண்ணில் 'இன்சூரன்ஸ் கவுன்சில் ஆஸ்திரேலியா' (Insurance Council Australia)-இன் பேரிடருக்கான அவசர இணைப்பை அழைக்கவும்.

இந்த வெளியீட்டை அணுகக்கூடிய வடிவத்தில் பெற, pph.communications@health.vic.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.